# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (ஐப்பசி-கார்த்திகை) நவம்பர் 2009 ஏர்-24, உழவு-11, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| செயலாளர் அறிக்கை | - | 2 |
| மூத்த தமிழறிஞர் | - | 4 |
| கொங்கு சாதனையாளர் | - | 7 |
| கொங்கு வேளாண் சாதனையாளர் | - | 14 |
| கொங்கு இளம் சாதனையாளர் | - | 17 |
| வாழ்த்துகிறோம் | - | 18 |
| அன்னையின் மடியே | - | 19 |
| படுகளம் | - | 22 |
| நூல் நயம் | - | 24 |
| மணமகள் தேவை | - | 26 |
| மணமகன் தேவை | - | 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# செயலாளர் அறிக்கை

கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் கொங்கு சமுதாயத்திற்கு ஆற்றிவரும் சேவைகள் பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றன. தமிழகம் மட்டுமல்லாமல் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் கொங்கு நண்பர்களும் சங்கத்தின் சேவைகளையும், செயல்பாடுகளையும் மனதாரப் பாராட்டி நேரிலும், கடிதங்கள் மூலமும், மின்னஞ்சல் மூலமும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். தன்னலம் கருதாது, சமுதாய நலன் கருதி அயராது பாடுபட்டுவரும் தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு இந்தப் பாராட்டுதல்களும், வாழ்த்துக்களும் மென்மேலும் சிறப்பாகப் பணியாற்றிட ஊக்கமளிப்பதாக உள்ளது. சங்கச் சாதனைகளுள் மேலும் ஒரு மைல்கல்லாக அமையவிருப்பது நாம் புதிதாகக் கட்டிவரும் விருந்தினர் இல்லமாகும். அருமையான வடிவமைப்பு, சிறந்த முகப்புத்தோற்றம், அனைத்து வசதிகளும் கொண்டதாகக் கட்டப்படும் அறைகள் முதலான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள இக்கட்டிடப் பணிகள் ஏறக்குறைய முடியும் தருவாயில் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீதியுள்ள பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பெற்று, 2010 ஆம் ஆண்டு தொடக்கத்தில் புது விருந்தினர் மாளிகை கொங்கு நண்பர்களின் பயன்பாட்டிற்குத் தயாராகி விடும் என்று நம்புகிறோம். அதற்குத் தற்சமயம் தேவை சங்க உறுப்பினர்களின் நிதியுதவிதான் என்பதை வலியுறுத்திக்கூறி, இதுவரை கட்டிட நன்கொடை அனுப்பாத கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் இனியும் காலம் தாழ்த்தாது குறைந்தது ரூ. 1000/- என்ற அளவிலாவது சங்கத்திற்கு உடனே அனுப்பி வைக்க வேண்டும் என்று சங்கத்தின் சார்பாக அன்புடன் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கத்திற்கு நன்கொடை அளிப்பது உங்கள் சமுதாயக் கடமை மட்டுமல்ல, கொங்கு சமுதாயத்திற்கு நீங்கள் சேவையாற்றுவதற்கு ஓர் அரிய வாய்ப்பாகும். ஈதலுக்கும், விருந்தோம்பலுக்கும் பெயர் பெற்ற இனம் நம் கொங்கினம். கேளாமலே கொடுக்கும் சீரிய குணமுள்ள கொங்கு சொந்தங்கள், கேட்டும் கொடுக்காது இருப்பது சிறிது வருத்தமளிப்பதாக இருந்தாலும், எங்களது கோரிக்கை இதுவரை சரியாக வந்தடையவில்லை என்று கருதி, இந்த வேண்டுகோளை சங்கம் சார்பாக உங்கள் முன் மீண்டும் வைக்கிறேன்.

இதைப் படித்ததும் முதல் வேலையாக உங்கள் நன்கொடையைச் சங்கத்திற்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

அன்புடன்

பரணி கே.பாலசுப்பரமணி, செயலாளர்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 35,99,942 |
| 734 | 3238 | P.M.நாச்சிமுத்து | 27,000 |
| 735 | 3239 | P.R.நாச்சிமுத்து | 25,000 |
| 736 | 2618 | Dr.உமாசெல்வராஜ் | 50,000 |
| 737 | | A.சின்னுச்சாமி | 5,000 |
| 738 | 2964 | N.மோகன் குமார் | 2,000 |
| 739 | 0163 | K.திருதணிகன் | 1,000 |
| 740 | 0161 | R.சபரி விமல் குமார் | 1,000 |
| 741 | 0115 | V.ரமேஷ் குமார் | 1,000 |
| 742 | 0846 | M.பழனியப்பன் | 1,000 |
| 743 | 0162 | N.S.கிருஷ்ணசாமி | 1,000 |
| 744 | | ஷீலா L.H | 1,000 |
| 745 | 02 | Dr.கொழந்தைவேலு | 1,000 |
| 746 | | விஷ்ணுர்தினி L.H | 1,000 |
| 747 | | S.செந்தில்குமரன் G.H | 1,000 |
| 748 | | வாசுகி L.H | 1,000 |
| 749 | | R.திவ்யதர்ஷிணி L.H | 1,000 |
| 750 | 3237 | A.ராஜா | 1,000 |
| 751 | 0165 | Dr.D.சசிகுமார் | 1,000 |
| 752 | 2252 | சக்திக்கனல் K.P.பழனிசாமி | 1,000 |
| 753 | | N.சுப்பிரமணி | 1,000 |
| 754 | | S.கவிதா L.H | 1,000 |
| 755 | | N.சாந்தி L.H | 1,000 |
| 756 | 1023 | K.C.கருப்பண்ணன் | 1,000 |
| 757 | | கார்த்திகேயன் G.H. | 1,000 |
| 758 | | G.ஆனந்தன் G.H. | 1,000 |
| 759 | | S.கோகுல்கிருஷ்ணன் G.H. | 1,000 |
| 760 | | G.ஆர்த்தி L.H | 1,000 |
| 761 | | அனிதா L.H | 1,000 |
| 762 | | A.பொன்னுசாமி | 1,000 |
| 763 | | K.பழனிச்சாமி | 1,000 |
| 764 | | N.K.நாச்சிமுத்து | 1,000 |
| 765 | | A.P.தண்டபாணி | 1,000 |
| 766 | 0177 | S.முருகேசன் | 1,000 |
| 767 | 0168 | S.ஈஸ்வரன் | 1,000 |
| 768 | 0169 | M.சக்திவேல்முருகன் | 1,000 |
| 769 | 0170 | S.குமார் | 1,000 |
| 770 | 0171 | V.சிதம்பரம் | 1,000 |
| 771 | 0172 | P.செந்தில்குமார் | 1,000 |
| 772 | 0173 | M.முருகேசன் | 1,000 |
| 773 | 0166 | R.கண்ணன் | 1,000 |
| | | மொத்தம் | **37,43,942** |

# அகவை 82ல் அடியெடுத்து வைத்துள்ள மூத்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார்



கொங்குநாடு தந்த புகழ் மணக்கும் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார். இப்பெருந்தகையாரின் சுவைததும்பும் இலக்கியப் பேச்சு கேட்பவர் உள்ளங்களை ஈர்த்து இன்பத்தில் ஆழ்த்தும். சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, செல்லப்பன் அவர்கள் இனித்திடும் முறையில் ஆற்றிய சிலப்பதிகாரச் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்து, "இதுவரை அவருடைய தேனினும் இனிய தமிழ் ஒலியைக் கேட்ட நாம் இன்றிலிருந்து அவரைச் 'சிலம்பொலி' என்றே அழைப்போம். இனி அவரைத் தமிழுலகம் 'சிலம்பொலி' என்றே அடையிட்டு அழைக்கட்டும்" என்று கூறிப் பாராட்டினார். அன்று முதல் செல்லப்பனார் சிலம்பொலி செல்லப்பரானார்.

இவர் நாமக்கல் மாவட்டம் சிவியாம்பாளையம் என்னும் சிற்றூரில் உழவர் குடும்பத்தில் 1928 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் பிறந்தார். இவருடைய பெற்றோர் சுப்பராயன், பழனியம்மாள். இனிய பண்புகளுடன் வளர்ந்த செல்லப்பனார் கல்வியை மிகுந்த ஆர்வத்துடன் கற்றார். பரமத்தி வேலூரிலுள்ள கந்தசாமிக் கண்டர் உயர் பள்ளியில் படித்துப் பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு திருச்சி தேசியக் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ., (கணிதம்) பட்டப்படிப்பை முடித்தார். பின்னர் எம்.ஏ., (தமிழ்), பி.டி., பிஎல்., பி.எச்.டி., பட்டங்களைக் கடின உழைப்பினால் பெற்றார். தாம் படித்த நாமக்கல் உயர் பள்ளியில் கணித ஆசிரியராகப் பணி புரிந்தார். பின்னர் மாவட்டக்கல்வி அலுவலராக மூன்று ஆண்டுகள் பணி ஆற்றினார். இரண்டாம் உலகத் தமிழ்மாநாட்டு உதவிச் சிறப்பு அலுவலராக ஓர் ஆண்டும், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநராகப் பத்தாண்டுகளும், இயக்குநராக ஐந்தாண்டுகளும் பணியாற்றிய பின்பு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளராகவும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் திறம்படச் செயலாற்றினார்.

சிலம்பொலியார் நாடறிந்த தமிழ்ப் பூஞ்சோலை. இவர் இலக்கிய மேடையில் வாய்திறந்தால் தமிழ் குற்றாலத்து அருவி போல் கொட்டும். கற்கண்டு கட்டியை எப்பக்கம் சுவைத்தாலும் இனிக்கும். அதுபோல சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, இராவணகாவியம் போன்ற இலக்கியங்களில் எந்தத் தலைப்பில் உரையாற்றினாலும் கற்கண்டாய், கனிச்சாறாய் இனிக்கும். சீவக சிந்தாமணி, தேம்பாவணி, சீறாப்புராணம், பெருங்கதை முதலிய இலக்கியங்களைப் பற்றித் தொடர் சொற்பொழிவு ஆற்றி மக்களிடத்தில் தமிழ்ப்பற்றையும், இலக்கியங்களைப் படித்துச் சுவைக்கும் ஆர்வத்தையும்

வளர்த்து வருகிறார். தமிழ்நாட்டில் இவர் கலந்து கொண்டு உரை ஆற்றாத தமிழ் மாநாடுகளோ, தமிழ்க்கருத்தரங்குகளோ, பட்டி மன்றங்களோ, ஆய்வு அரங்குகளோ இல்லை என்று கூறலாம்.

மீரா பவுண்டேஷனில் இவர் நிகழ்த்திய சீறாப்புராணத் தொடர் சொற்பொழிவு வளைகுடா நாடுகளில் இன்னும் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன. எழுத்துப்பணியிலும் சிலம்பொலியார் தனி முத்திரை பதித்துள்ளார். நினைவாற்றலும் பழுத்த புலமையும் வாய்ந்த செல்லப்பனார் சிலம்பொலி, இலக்கியச் சிந்தனைகள், பெருங்கதை ஆராய்ச்சி, நெஞ்சை அள்ளும் சீறா, பாவேந்தர் ஓர் உலகக் கவிஞர், காப்பியக் கம்பரும் புரட்சிக் கவிஞரும், வளரும் தமிழ், சங்கத் தமிழ்த் தேன் போன்ற சிந்தைக்கினிய நூல்களையும், மலர் நீட்டம், நல்ல குறுந்தொகையில் நானிலம், நான் ஒரு தும்பி முதலிய திறனாய்வு நூல்களையும், நாலடி நல்லுரை, சிலப்பதிகாரத் தெளிவுரை, மணிமேகலைத் தெளிவுரை போன்ற அரிய உரை நூல்களையும் படைத்துத் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்துள்ளார். தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எழுதிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களுக்கு மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார். இவருடைய அணிந்துரைகள் ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

சிலம்பொலியாரின் அளப்பரிய தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, தவத்திரு. குன்றக்குடி அடிகளார் 'நூலறி புலவர்' என்றும், மீரா நிறுவனத்தார் 'சீறாச் செல்வர்' என்றும், மலேசியத் தமிழ்ச் சங்கத்தார் 'தமிழ் நாவலர்' என்றும் பட்டங்கள் வழங்கி சிறப்பித்துள்ளனர்.

கலைஞர் விருது, கலைமாமணி விருது, பாவேந்தர் விருது, இராசாசர் முத்தையா செட்டியார் நினைவு விருது, சீறா விருது, கொங்கு மாமணி விருது, கபிலர் விருது, இளங்கோ விருது, இலக்கியச் செல்வர் விருது ஆதித்தனார் விருது, சொல்வேந்தர் விருது முதலான விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவராய்த் திகழ்கின்றார்.

"திறமையான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியாரின் வாக்கிற்கேற்ப உலக நாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் சிலம்பொலியாரின் இனித்திடும் இலக்கியப் பேச்சினைக் கேட்டு மகிழ விரும்பி வேண்டி அழைத்தனர். அன்பு அழைப்பினை ஏற்று மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு நாடுகள் ஆகிய நாடுகளுக்குச் சென்று தேமதுரத் தமிழோசையைப் பரவச் செய்துள்ளார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா சென்று சுமார் 15 நகரங்களில் நடந்த இலக்கியக் கூட்டங்களில் மணிக்கணக்கில் சொற்பொழிவாற்றியது பலரையும் வியக்கவைத்தது. பெண்குலத்தின் பொன் விளக்காய் ஒளிர்ந்த செல்லம்மாளை மணந்து இல்வாழ்க்கையை இனிது நடத்தி,மணிமேகலை, கௌதமி, நகைமுத்து ஆகிய

பெண்மக்களையும் தொல்காப்பியன், கொங்குவேள் ஆகிய ஆண் மக்களையும் ஈன்றெத்தனர்.

ஓய்வு பெற்ற பின்னரும் ஓய்வறியாமல் தொடர்ந்து தமிழ்ப்பணி ஆற்றிவரும் சிலம்பொலியார் செம்மொழி உயராய்வு மையத்தின் எண்பேராயம் குழுவின் உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார். எல்லோரிடத்திலும் எளிமையாகவும் இனிமையாகவும் அன்பாகவும் பழகும் பண்பாளர் செல்லப்பனார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆகியவர்களிடத்தில் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருப்பவர்.

செம்மொழி என்ற பெருமை பெற்றுள்ள தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு எழுச்சிமிக்க எழுத்தாலும் இனிய தமிழ்ப் பேச்சாலும் அளப்பரிய தொண்டாற்றி வரும் தமிழறிஞர் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் ‘சாவில் தமிழ் படித்துச்சாகவேண்டும், எந்தன் சாம்பலது தமிழ் மணந்து வேக வேண்டும்’ எனும் யாழ்ப்பாணத்துக் கவிஞர் சச்சிதானந்தனின் பாடலடிகளை மேடைதோறும் முழங்கி மக்கள் மனதில் தமிழ் உணர்வை விதைத்து வருபவர்.

எளிமையானவர், சிறந்த பண்பாளர், சான்றோர் என்ற சொல்லுக்குச் சிறந்த உதாரணமாக வாழ்ந்து வரும் மாமனிதர், தமிழே மூச்சு, தமிழே சொத்து என்று வாழ்ந்து வருபவர், 42 ஆண்டுகள் சென்னையில் வசித்தாலும் தனக்கென சொந்த வீடு கூட இல்லாதவர், ஆசிரியப் பணியில் இருந்தபோது எண்ணற்ற மாணவர்களை ஏற்றிவிட்டவர், தமிழ்ப்பணிக்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டவர் போன்ற பல சிறப்புகள் பெற்றுள்ள இவர் ஆற்றிய மூன்று உலகளாவிய சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டியவையாகும்.

1. தமிழ் கூறும் நல்லுலகில் 60 ஆண்டுகளாக மிக அதிக எண்ணிக்கையில் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி சாதனை.
2. 1000 க்கு மேற்பட்ட அணிந்துரைகள் வழங்கிச் சாதனை
3. அதிக எண்ணிக்கையில் பல தலைப்புகளில் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தி சாதனை

இவை மூன்றும் தமிழ் இலக்கிய வரலாற்றில் யாரும் செய்திடாத, இனியும் செய்ய இயலாத உலகச் சாதனைகளாகும். கொங்குநாடு தந்த கொடை சிலம்பொலியார் அவர்கள் 82 ஆம் அகவையில் அடியெடுத்து வைத்துள்ள இத்தருணத்தில் அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழன்னைக்கு மேலும் தொண்டு புரிய வேண்டுமென சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்தி மகிழ்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## அசோகன் முத்துசாமி

காங்கேயம் அருகில் உள்ள சிலம்பகவுண்டன் வலசு என்ற கிராமத்தில் 15-07-1960 ஆம் ஆண்டு S.K.முத்துசாமிக் கவுண்டர், நாச்சாத்தாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் திரு. அசோகன் அவர்கள்.

உதகமண்டலத்தில் பள்ளிப்படிப்பையும், இளம்கலை (வேதியியல்) படிப்பையும் பயின்றார். பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் MBA பட்டம் பெற்றார்.

படிப்பு முடிந்தவுடன் உதகையில் ஒரு 3 நட்சத்திர ஹோட்டலை நடத்தி வந்தார். பின்னர் கோவைக்கு இடம் பெயர்ந்து 1998 ல் அம்பாள் ஆட்டோ நிறுவனத்தைத் தொடங்கினார். வாடிக்கையாளர் சேவையில் சிறந்து விளங்கும் இந்த நிறுவனம் படிப்படியாக வளர்ந்து தற்போது கோவை, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களில் கிளைகளை அமைத்து சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

இன்று மாதம் ஒன்றுக்கு சுமார் 500 கார்களுக்கு மேல் விற்பனையை எட்டியுள்ளது. இந்தியாவிலேயே மாருதியின் முதல் பிளாட்டின டீலர் என்ற பெருமையை அம்பாள் ஆட்டோ நிறுவனம் பெற்றுள்ளது. இன்று சுமார் 700 பேர் அம்பாள் குழுமத்தில் பணியாற்றி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் மகுடம் சூட்டுவது போல மாருதியிடம் இந்தியாவில் நான்கு முறை பிளாட்டினம் விருதைப்பெற்ற ஒரே நிறுவனம் என்ற பெருமையை அம்பாள்

ஆட்டோ பெற்றுள்ளது. இன்று சுமார் 700 பேர் அம்பாள் ஆட்டோ குழுமத்தில் பணியாற்றி வருகிறார்கள்.

கண்ணந்த குலத்தைச் சேர்ந்த திரு. அசோகன் அவர்கள் 1988 ம் ஆண்டு சந்தனாசெல்வி அவர்களைத் திருமணம் செய்துக்கொண்டார். இவர்களுக்கு திரு. அனீஷ் முத்துசாமி என்ற மகன் உள்ளார். அவர் தற்போது கோவை P.S.G.கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பொறியியல் படித்து வருகிறார்.

திரு. அசோகன் அவர்களின் சாதனைகளைப் பாராட்டி ஊட்டி அரிமா சங்கம் இவருக்கு "வாழ்நாள் சாதனையாளர்" விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

சமூக சேவையில் ஆர்வமுள்ள இவர், மலைவாழ் மக்கள் மற்றும் கிராமப்புற ஏழை மாணவர்கள் பயிலும் அரசுப் பள்ளிகளில் வகுப்பறை மற்றும் பள்ளிகளுக்கு தேவையான இதர வசதிகளை வருடந்தோறும் செய்து வருகிறார். அதற்காக ACME ரவுண்டேபிள் அமைப்பு இவருக்கு கல்வியின் மூலம் சுதந்திரத்திற்கான (Freedom Through Education) விருதை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையை வழங்கியதன் மூலம் கோவை பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதாக வளர்ந்துள்ள அம்பாள் ஆட்டோ நிறுவனத்தை, திரு. அசோகன் அவர்கள் கடின உழைப்பாலும், திட்டமிட்ட செயல்பட்டாலும் உருவாக்கியுள்ளார்.

சிறந்த தொழில் அதிபராக விளங்கிவரும் திரு.அசோகன் அவர்களின் தலைமையில் அம்பாள் ஆட்டோ நிறுவனம் மென்மேலும் வளர்ந்து புதிய சாதனைகளைப் படைக்க வாழ்த்தி, கொங்கு நண்பர்கள் சங்கம் அவருக்கு "கொங்கு சாதனையாளர்" விருதை வழங்கி கௌரவித்தது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## பையா கவுண்டர் (எ) ஆர்.கிருஷ்ணன்

கோவை மாவட்டம், காளப்பட்டியில் திரு. ராயக்கவுண்டர் - திருமதி பூவாத்தாள் தம்பதியருக்கு சேரன் கூட்டத்தில் 1959 ம் ஆண்டு பிறந்தார் திரு. ஆர். கிருஷ்ணன்.

பையாக் கவுண்டர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் இவர், 2001 அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்று, காளப்பட்டி பேரூராட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். காளப்பட்டி பேரூராட்சியின் எல்லைக்குள் எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், நேரில் சென்று மக்களோடு பேசி அதை நல்ல முறையில் தீர்த்து வருகிறார்.

காளப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியை, அரசு மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு தமிழக அரசிடம் அனுமதி பெறுவதற்கு உதவியாக இருந்தவர்.

காளப்பட்டி நான்குமுனை சந்திப்பில் பல ஆண்டுகளாக இருந்த ஆக்கிரமிப்பை அனைத்துக்கட்சி நண்பர்களுடனும் பேசி, ஆக்கிரமிப்பை அகற்றி அழகான, விரிவான சந்திப்பை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்து வரும் இருதய நோயாளிகளுக்கு தனது சொந்த நிதியில் இருந்து ரூ. 5,000/- வழங்கி வருகிறார்.

காளப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள பழமையான பெருமாள் கோவிலை புதுப்பித்துள்ளார். பொது மக்களின் உதவியோடு இவர் தலைமையில் சித்ரா அருகில் ஒரு மாரியம்மன் கோவில் உருவாகி வருகிறது.

2001 - 2006 ம் ஆண்டுகளில் பேரூராட்சி தலைவராக சிறப்பாகப் பணியாற்றிய திரு. பையாக்கவுண்டர் அவர்கள் மக்களோடு மக்களாகப் பழகி அனைவரின் அன்பையும் பெற்றார்.

2006-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளாட்சித்தேர்தலில் மக்கள் கூட்டணி என்ற பெயரில் காளப்பட்டி பேரூராட்சியின் 15 வார்டுகளிலும் சுயேட்சையாக இவர் தலைமையில் போட்டியிட்ட 14 பேர் வெற்றிவாகை சூடினர். 2006 ல் இவர் மீண்டும் காளப்பட்டி பேரூராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


தமிழகத்தில்2006 ல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் சுயேட்சையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே பேரூராட்சி தலைவர் திரு.பையாக்கவுண்டர் அவர்கள். மற்ற அனைத்து பேரூராட்சி தலைவர்களும் அரசியல் கட்சி சார்ந்தவர்கள், கூட்டணி மூலம் வெற்றி பெற்றவர்கள்.

இவரது சாதனைகளுக்கு மனைவி திருமதி வசந்தாமணி அவர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார். இவரும் காளப்பட்டி 15வது வார்டின் பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆவார். இவர்களுடைய மூத்த மகள் திருமதி சசிகலா, மருமகன் திரு. பூர்ண சந்திரன், இளைய மகள் திருமதி பூர்ணிமா, மருமகன் திரு.செந்தில் குமார் ஆவர்.

தனது அன்பாலும், சிறந்த தலைமைப் பண்பாலும் காளப்பட்டி பேரூராட்சியின் தலைவராக சிறப்பாகப் பணியாற்றி நமது கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துவரும் திரு. பையாக்கவுண்டர் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருது வழங்கி சிறப்பித்தது.

❖❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



**வெ.மு.சிவநேசன்**

திரு.வெ.மு.சிவநேசன் அவர்கள் 14-10-1932 இல் நாமக்கல் மாவட்டம் முத்தம்மா பட்டியில் வெள்ளையக்கவுண்டர் - செல்லம்மாள் தம்பதியருக்கு மகனாகப்பிறந்தார். பெருங்குடி கூட்டத்தைச் சேர்ந்த இவரின் மனைவி காளியம்மாள்.

இவர்களுக்கு 2 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர். இவர் 1952 இல் மலேசியாவிற்கு சென்றார். அங்கு 1956 இல் நாமக்கல் தாலுக்கா நலன் அபிவிருத்தி சங்கத்தை தோற்றுவித்தவர்களுள் இவரும் ஒருவர். சங்கத்தில் இணைந்து செயலாளராகவும் பின் பொருளாளராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். 1981 இல் செயலாளராக பொறுப்பேற்றார். 1986 முதல் 1991 வரை இரவு பகல் பாராமல், தன்னலம் கருதாமல் மன்றத்தை நடத்தி வந்தார்.

அதனால் 1992 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மன்றத்தின் ஆயுள்காலத் தலைவராகவும் ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார். இவர் தொண்டினைப் பாராட்டி 1993 இல் நெகிரி செம்பிலான் மாநில ஆட்சியாளரால் விருது வழங்கிப்பாராட்டப்பட்டார்

நாடு கடந்து சென்றாலும் தன் இனமக்களின் நன்மை கருதித் தொண்டு செய்துவரும் அன்னாரை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டி "கொங்கு சாதனையாளர்" விருதை வழங்கி கௌரவித்தது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## குப்பானூர் பி.சிவானந்தம்

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகில் உள்ளது குப்பானூர் என்ற குக்கிராமம். உழைப்பையே மூலதனமாகக் கொண்ட திரு. பழனிவேல் கவுண்டருக்கு கடைக்குட்டியாக 27-1-1940 பிறந்தவர்தான், நமது சாதனையாளர் திரு. குப்பானூர் பழனிவேல் சிவானந்தம். சங்ககிரி துர்கத்தில் இளம் வயதில் பள்ளிப்படிப்பை முடித்தார். பின் ஈரோடு சிக்கய நாய்க்கர் கல்லூரியில் P.U.C படிப்பை மேற்கொண்டார். பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் சிறந்த மாணவனாகத் தேர்வு பெற்றார்.

ஆறு பொறியியல் கல்லூரிகளே இருந்த அந்தக் காலத்தில் கோவை P.S.G.பொறியியல் கல்லூரியில் சேர அவர் தேர்வு பெற்றதே இவரது சாதனைகளுக்கு முதல் சான்று. பொறியியல் பட்டதாரியாக அவதாரம் எடுத்த நமது கொங்கு சொந்தம் அமெரிக்கா என்றால் என்ன என்று எண்ணியிருந்த அக்காலத்தில் 1967 ஆம் ஆண்டு மேற்படிப்பிற்காக அமெரிக்கா சென்றது அவரது தொடர் சாதனையின் அடுத்த சான்று. அன்னார் அவர்கள் 1971 ஆம் ஆண்டு Dr. A.ஈஸ்வரி அவர்களை மணம்முடித்தார். தம்பதியினர் அமெரிக்க மண்ணில் அன்று முதல் இன்று வரை தங்களது வாழ்க்கைப் பயணத்தில் தொடர்ந்து வெற்றிநடைபோட்டுக் கொண்டுள்ளார்கள். வெற்றி வாழ்க்கை பயணத்தில் கிடைத்த மாணிக்க மணிகள் தான் சீதா, சித்ரா என்ற இரண்டு பெண் குழந்தைகள்.


திரு. சிவானந்தம் அவர்கள் பொறியாளராக பல சாதனைகள் படைத்துள்ளார். அமெரிக்காவில் இவர் வாழும் பகுதிக்கு செல்லும் நமது கொங்கு சொந்தங்களுக்கு நமது சாதனைச் செம்மல் திரு. சிவானந்தம், Dr. ஈஸ்வரி தம்பதியினரின் அன்பும் அரவணைப்பும் நமது சொந்தங்களுக்கு நாம் வந்திருப்பது அன்னிய மண்ணா அல்லது நமது பிறந்த இடமா என்ற சந்தேகம் எழும் அளவிற்கு இருந்தன என்று சொன்னால் அது மிகையாகாது. அமெரிக்காவில் கொங்கு நற்பணி மன்ற நிறுவன உறுப்பினர்களில் முக்கியமானவராக இருந்து வருகிறார்.

நமது சமுதாய முன்னோடிகள், பெற்றோர்கள், மாணவ மாணவியர் என்று அனைத்துப்பிரிவினருக்கும் தம்பதியினரின் அரவணைப்பு அளவிட முடியாததாக உள்ளது. அருட்செல்வர் மகாலிங்கம் ஐயா, மதிப்பிற்குரிய பண்ணாரி அம்மன் குழுமத் தலைவர் S.V.பாலசுப்ரமணியம், கவிஞர் கண்ணதாசன், திருப்பூர் திரு.வேலப்பன் போன்ற பல ஆன்றோர், சான்றோர்கள் சிவானந்தம் தம்பதியரின் அன்பு உபசரிப்பை ஏற்றவர்கள் என்பதிலிருந்தே, அவருடைய சமுதாயப்பற்று வெளிப்படையாகத் தெரிகிறது.

எளிமை, சிறந்த செயல்பாடு, அன்பு, அரவணைப்பு, விருந்தோம்பல், சமுதாய மக்களுக்கு உதவி புரிதல் போன்ற மிக உயரிய பண்புகளுக்கு உரியவரான சாதனையாளர் பொறியாளர் திரு. சிவானந்தம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு சாதனையாளர்” விருதை வழங்கி சிறப்பித்தது.

❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## எஸ்.சி. சின்னசாமி

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் சந்தையப்பாளையத்தில் 1-7-1943 ம் நாள் S.P.சென்னியப்ப கவுண்டர் - கருப்பாயம்மாள் தம்பதியருக்கு முதல் மகனாய் எளிய குடும்பத்தில் பிறந்தவர் திரு. எஸ்.சி.சின்னசாமி அவர்கள்.

7ம் வகுப்பு வரை திண்ணைப்பள்ளியில் படித்த இவர், தனது 17 வது வயதில் குன்னத்தூரில் அமைந்திருந்த ஸ்ரீ நடராஜா ஒர்க்ஷாப்பில் உதவியாளராக வேலைக்கு சேர்ந்தார். படிப்படியாக தொழிலைக்கற்று 1964ம் ஆண்டு ஸ்ரீ ஆண்டவர் ஒர்க்ஷாப் என்னும் பெயரில் சிறிய தொழிலகத்தைத் தொடங்கி அதில் தானே கிணற்று மோட்டார்களுக்கு காயில் கட்டும் தொழிலைச் செய்து வந்தார். ஒரு லேத் மெஷினை வாங்கி அதில் டிராக்டர் மற்றும் ரிக் உதிரி பாகங்களைத் தயார் செய்து தனி நபராகவே கொண்டு சென்று விற்று வந்தார். பொருளின் தரத்தால் வியாபாரம் பெருகவே உதிரி பாகங்களை அதிகஅளவில் உற்பத்தி செய்து இந்தியா முழுவதும் விற்பனை செய்தும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்து வருகிறார்.

ஆதி குன்னத்தூர் நலச்சங்கம் என்ற சங்கத்தை ஏற்படுத்தி அதன் தலைவராக இருந்து பல நற்பணிகளைச் செய்து வருகிறார். குஜராத் பூகம்பத்தின்போதும், சுனாமி ஏற்பட்டபோதும் குன்னத்தூர் நலச்சங்கத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளைக்கொண்டு சேர்த்தார். மேலும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஏற்படவும், ஸ்ரீ பொங்காளியம்மன் கோவிலைப் புதுப்பித்துச் சிறப்பு வாய்ந்த கோவிலாக உருவாக்கவும் பாடுபட்டு வருகிறார்.

சிறந்த ஆன்மீகவாதியான இவர் குன்னத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் நடைபெறும் ஆலயத் திருப்பணிகளுக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்து வருகிறார். தமிழக அரசு இவரைக் குன்னத்தூர் குன்றரீஸ்வரர் திருக்கோவில் மற்றும் அங்காளம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினராக நியமித்துள்ளது.

தன்னுடைய சொந்தக் கட்டிடத்தில் கொங்கு வேளாளர் மெட்ரிக் பள்ளியைத் தொடங்கி அதனை மேனிலைப்பள்ளியாக உயர்த்தி அதன் தலைவராகவும் உள்ளார். குன்னத்தூரில் கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவை அமைய முன்னின்று ஏற்பாடுகள் செய்து கொங்கு சமுதாயம் மேம்பட தன்னுடைய நிதி மற்றும் உழைப்பை வழங்கி பாடுபட்டு வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி எஸ்.உத்தமி, மகன் திரு. சி.கமல், மருமகள் திருமதி கே.பூங்கோதை கமல், மகள் திருமதி கே.கோமதி குமார், மருமகன் திரு ஏ.எஸ்.குமார் ஆவர்.

**வேளாண்மை :**

வேளாண்மை தொழிலில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காலை 5 மணிக்கே வேளாண் பணிகளைத் தொடங்கி விடுகிறார். வேளாண் மேம்பாட்டிற்காக தனது மதி நுட்பத்தால் நவீன முறையில் ரோட்டவேட்டர் தயார் செய்து அதனை இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருகிறார். ரிக் தொழிலில் பல நவீன யுக்திகளைக் கையாண்டு குறைந்த நேரத்தில் ஆழ்துளை (Bore) போடும் உபகரணங்களைத் தயாரித்து உள்ளார்.

இதன் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு நேரம் மற்றும் உற்பத்திச்செலவை மிச்சப்படுத்த வழிவகை செய்து வேளாண்மைப் பணிகள் மேம்படப் பாடுபட்டு வரும் இவருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் " கொங்கு வேளாண் சாதனையாளர்" விருது வழங்கி பாராட்டியது.

❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## எஸ். சந்திரசேகர்

கோவை மாவட்டம், சூலூர் ஒன்றியம் குமாரபாளையம் கிராமத்தில் திரு. ஆர்.சண்முகக்கவுண்டர் - திருமதி எஸ்.சுப்புலட்சுமி ஆகியோருக்கு 1967 ம் ஆண்டில் பிறந்தார். இவர் முழுக்காதன் குலத்தைச் சேர்ந்தவர்.

பொள்ளாச்சி N.G.M.கலைக்கல்லூரியில் B.A., வரலாறும், M.A., அரசியல் அறிவியலும் (Political Science) பயின்றார்.


*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின் செல்பவர்*

என்று வள்ளுவர் சொன்ன வேளாண் தொழிலின் பெருமையையும் சிறப்பையும் உணர்ந்து வேளாண் தொழிலில் ஈடுபட்டார். இவர் சொட்டு நீர் பாசனம் மூலமும் இயற்கை வேளாண்மை முறையிலும் தென்னை விவசாயம் செய்து அதிக மகசூல் எடுத்து வருகிறார்.

இவருடைய மனைவி பெயர் திருமதி கௌரிசங்கரி இத்தம்பதியருக்கு எஸ்.பிரியங்கா, எஸ்.ராதிகா, என்ற மகள்கள் உள்ளனர். தென்னை விவசாயத்தில் சாதனை புரிந்துவரும் இவருக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு வேளாண் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



**பி.ராகுல்**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம்,. முத்துக்காளிப் பட்டியைச் சேர்ந்த திரு. பி.பிரபு – திருமதி எஸ்.அமுதா தம்பதியரின் மகன், பண்ணை குலச்செல்வன் பி.ராகுல்.

சென்னை, அடையாரில் உள்ள செயின்ட் பாட்ரிக்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்துவருகிறார்.

தாய், தந்தையின் ஊக்குவிப்பால் தனது 7வயது முதல் Gymnastics பயிற்சி செய்து வருகிறார். 2003-ம் ஆண்டில் முதல் தங்கப்பதக்கத்தை வாங்கிய பி.ராகுல் இதுவரை மாநில அளவிலான Gymnastics போட்டிகளில் 30 க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்றுள்ளார்.

'யானையின் பலம் தும்பிக்கையில், மனிதனின் பலம் நம்பிக்கையில்' என்பதை மனதில் கொண்டு கடுமையான பயிற்சி செய்து 2008ம் ஆண்டு திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான Gymnastics போட்டியில் கலந்துகொண்டு வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

தமிழகத்திலிருந்து Gymnastics ல் தேசிய பதக்கம் வாங்கிய முதல் மாணவர் இவர் என்பது நம் கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

தேசிய அளவில் பதக்கம் பெற்றுள்ள செல்வன் பி.ராகுல் மேலும் பல சாதனைகள் புரிந்திட வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இவருக்கு "கொங்கு இளம் சாதனையாளர்" விருது வழங்கிப்பாராட்டியது.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமம், திரு.பழனிவேல் கவுண்டர் - திருமதி சவுந்திரம் ஆகியோரின் இளைய மகனான திரு. N.P.இசையழகன் B.Com., F.C.A., B.L., A.I.C.W.A., M.B.A., பட்டயக்கணக்காளர் (Chartered Accountant & Cost Accountant) மற்றும் வழக்குரைஞர் பட்டம் பயின்றுவிட்டு சென்னை தி.நகரில் இசை & கோ என்ற பெயரில் ஆடிட்டிங் நிறுவனத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

நமது சங்கத்தின் உறுப்பினரான திரு. N.P.இசையழகன் (உ.எ.ண1970) அவர்கள் அகில இந்திய தணிக்கையாளர்கள் ஸ்தாபனத்தில் (The Institute of Chartered Accountants of India, New Delhi) 2009-2010 ம் ஆண்டிற்கான நேர்முக வரி ஆலோசனை சபையின் உறுப்பினராக (Co-opted Member - Direct Taxes Committee) நியமிக்கப்பட்டுள்ளார். தென் மண்டலத்தின் (Southern Region - தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா) சார்பாக, தணிக்கையாளர்கள் ஸ்தாபனத்தில் (ICAI-New Delhi) உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய அளவிளான ஸதாபனம் ஒன்றில் கொங்கு சமுதாயத்தைச் சார்ந்த நமது நண்பர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளது நமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது.

இந்தப் புதிய பொறுப்பில் சிறப்பாகச் செயல்பட்டு சாதனைகள் பல படைக்க சங்கம் தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

# மணமகன் தேவை

கண்ணன் கூட்டம், 24வயது சுவாதி நட்சத்திரம் 7ல் செவ்வாய் - MBBS - படித்து மேற்படிப்புக்கு அமெரிக்கா செல்லவிருக்கும் 5’3’’ - உயரமுள்ள பெண்ணுக்கு அமெரிக்காவில் உள்ள / அமெரிக்க செல்ல விருப்பமுள்ள மருத்துவம் / பொறியாளர் பட்டம் பெற்ற வரன் தேவை.

தொடர்புக்கு
டி.கே. சுப்ரமணியன் - திருமணமாலை
திருமணத் தகவல் மையம்
60, மேகசின் சாலை, பட்ரோடு, பரங்கிமலை, சென்னை - 600 016.
தொ.பே. : 044-22311411, செல் : 98403 64348

# அன்னையின் மடியே ஆனந்தம்

இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கோடு ஐ.நா. சபை அறிவித்த மலைகளின் ஆண்டு 2007 முடிந்துவிட்டது என்றாலும் அது தொடர்பான செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். இந்த அடிப்படையில்தான் இந்தியாவில் இப்போதிருக்கும் 19% காடுகளின் பரப்பை 10 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் (2007) 25% க்கும், 11வது திட்டத்தின் இறுதிக்குள் (2012) 23% க்கும் அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் இயற்கை மீது அதிக அளவில் தாக்குதல் இல்லை. ஆனால் அண்மைக்காலத்தில் இயற்கை வளங்கள் தொலைநோக்கில்லாமல் சுரண்டப்படுவது தொடர்கதையாகி வருகிறது. அதன் பிளைவு வெள்ளம், வறட்சி வறுமை, நிலநடுக்கம், உடல் நலக்கேடு போன்ற பல்வேறு பிரச்சினைகள்.

இயற்கை அன்னை இலவசமாகத் தந்த இரு கொடைகள் நீரும், காற்றும். இன்று இரண்டுமே விலைபொருளாகி விட்டன. தொழிற்சாலைகளின் கழிவால், நதி நீர் நஞ்சாகிறது. நீர் வங்கிகளான குளங்கள் குப்பை மேடுகளாகின்றன. ஒரு லிட்டர் மினரல் வாட்டர் விலை அதிகமாக உள்ளது. ஆலைப் புகையும், வாகனப் புகையும் காற்றை நோயின் தூதுவனாக்கிவிட்டன. பியூட்டி பார்லர்கள் போல் ஆக்சிஜன் பார்லர்கள் பெருநகரங்களில் முளைக்கின்றன. நல் காற்றைச் சுவாசிக்க மணிக்கு ரூ. 50

உலகம் மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டிருந்தாலும் உபயோகிக்கத்தக்க நீர் 0.66% மட்டுமே. (கடல் நீராக 97.2%, உறைந்த பனிக்கட்டிகளாக 2.14% உள்ளது) இந்த நீரும் நகர்ப்புறத்தின் வேகமான வளர்ச்சி, தொழிற்சாலைகளின் பெருக்கம் போன்ற காரணங்களால் மாசடைந்து வருகிறது. நாட்டிலேயே அதிக அளவில் மழை பெய்யக் கூடிய சிரபுஞ்சியில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு உள்ளது. அன்று எந்த நதிக்கரைகள் நாகரிகத்தின் ஊற்றுக்கண்ணாய் இருந்தனவோ இன்று அதே நதிக்கரை நகரங்கள் நதிகளை நாசப்படுத்தி வருகின்றன.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலத்தில் இணக்கமாக இருந்த சுற்றுச்சூழல், வளர்ச்சி என்ற பெயரில் பொருளாதாரப் போட்டியில் களம் இறங்கிய பின்புதான் வெகுவாக பாதிப்புக்குள்ளானது. பொருளாதார வளர்ச்சி, வசதியான வாழ்க்கை நிலையை அளித்த போதிலும் மகிழ்ச்சியான வாழ்க்கை நிலை என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. சுற்றுச்சூழல் சீர்கேட்டில் வளரும் நாடுகளை விட வளர்ச்சி அடைந்த

நாடுகளின் பங்கே அதிகம், காரணம் வளரும் நாடுகள் வாழ்வைப்பற்றி கவலை கொண்டுள்ளன. மாறாக வளர்ச்சி அடைந்த நாடுகள் வசதியைப் பெருக்குவது பற்றிக் கவலை கொள்கின்றன. ஓர் அமெரிக்கக் குடும்பம் சராசரி இந்தியக்குடும்பத்தை விட 40 மடங்கு அதிகமாகச் சுற்றுச்சூழலைப் பாதிப்படையச் செய்கிறது.

பூமித்தாயின் மடியில் தாவர இனம், விலங்கினம், மனித இனம் ஆகியவற்றிற்கிடையே சமச்சீர் நிலை உள்ளது. இவற்றில் ஒன்று குறைந்தாலோ அல்லது மிகுந்தாலோ இயற்கையின் சமநிலை சீர்குலைகிறது. வன விலங்குகளையும், பறவைகளையும் போற்றும் பழக்கமும், பண்பாடும் உள்ள நாடு பாரத நாடு. இவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருட்டே இந்து மத வழிபாட்டில் பசு, பாம்பு, எலி, எருமை போன்ற விலங்குகளும், கிளி, பருந்து, கழுகு போன்ற பறவைகளும், தெய்வங்களின் வாகனங்களாகக் கருதப்பட்டுப் போற்றப்பட்டு வருகின்றன.

இயற்கைச் சூழ்நிலையில் பறவைகளையும் விலங்குகளையும் காண்பது உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் புத்துணர்வையும் தர வல்லது. உல்லாசப் பயணிகளை ஈர்த்து அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடியது. மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள், வண்டுகள், ஊர்வன, பறப்பன அனைத்துமே மண்ணிற்கு மகுடம் சேர்த்து மனித வாழ்க்கைக்கு வளமும் பொலிவும் சேர்க்கின்றன.

இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாமல் அழிவுப்பாதையை நோக்கி வீறு நடை போடுகிறோம் என்பது வேதனைக்குரியது.

மரங்கள் இயற்கை அளித்த ஏர்கண்டிஷனர்கள். நச்சுப்புகைகள், மாசுகள் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்தும் சாதனங்களாகவும் இவை உள்ளன. மண் அரிப்பைத் தடுத்து நிறுத்துவதும் மரங்களே, இதைக்கருத்தில் கொண்டே வன விழா வாரம் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. "வனம் என்பது லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிப்பது, மரம் என்றால் நீர், நீர் என்றால் உணவு, உணவு என்றால் வாழ்வு" என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

மனித குலத்தின் துணையின்றி வனப்புடன் இயற்கை இருக்கும். ஆனால் இயற்கையின் துணையின்றி மனிதனால் ஒரு நிமிடம் கூட உயிர்வாழ முடியாது. இயற்கையை அண்டிப்பிழைக்கும் ஒரு சாதாரண படைப்புதான் மனிதன். நம் வாழ்க்கைத்தரம் உயரவும், எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கைத் தரத்தைக்காக்கவும் இயற்கையைக் காக்கும் வகையில் சில ஒழுக்க நெறிகளை மனத்தில் கொண்டு செயல்படவேண்டும்.

இயற்கை அனைத்து ஜீவராசிகளுக்குமாகத்தான் உண்டானதே தவிர மனிதத் தேவைக்காக மட்டுமல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இயற்கை வளங்கள் எல்லையற்றவை அல்ல. எனவே அவற்றை வீணாக்கக் கூடாது.

இயற்கையைப்பற்றிய ஆர்வமே இல்லாத போக்கை உடனடியாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

புகைப்பது,. குடிப்பது, புலால் உண்பது, இயற்கை வளங்களை ஊதாரித்தனமாக முரண்பாடாகப் பயன்படுத்துதல் போன்ற தீய பழக்கங்களிலிருந்து விடுபடவேண்டும்.

அளவாக நுகர்வது, அதன் விளைவாகக் கழிவுப் பொருட்களைக் குறைத்து, அசுத்தத்தையும் குறைப்பதாகிய எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

இயற்கை வளங்களைப் பாதுகாத்தலுக்கு நான்கு சொற்களை நினைவில் நிறுத்த வேண்டும். ஒன்று Reduce Waste - கழிவுகளைக் குறைத்தல், இரண்டாவது Reuse மீண்டும் பயன்படுத்துதல், மூன்றாவது Recycle மறுசுழற்சிக்கு உட்படுத்துதல், நான்காவது Recover வளங்களை மீட்டல் என்பதாகும். இதனைக்கடைப்பிடித்தால் இயற்கை நலம் பேணுதலும், மக்கள் நலம் காத்தலும் இயலும்.

'வந்தே மாதரம்' பாடலின் சுஜலாம், சுஃபலாம், மலையஜ சீதலாம்' என்ற வரிகள் நிலவளம், நீரவளம், காற்று வளம் ஆகிய இயற்கைச்சக்திகளைப் போற்றுகின்றன. அவற்றின் முக்கியத்துவத்தை உணராமல் மாசுப்படுத்தியதால் மாபெரும் ஆபத்துகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. வெப்பம் 6 முதல் 10 டிகிரி வரை உயரும், பருவ நிலை மாறும், விளைச்சல் குறையும், வறட்சியும் வறுமையும் பட்டினிச்சாவும் தினசரி நிகழ்வாகும், பனி மலை உருகும், வெள்ளம் கரை உடைக்கும், கடலோர நகரங்கள் காணாமல் போகும், தீவுகள் மூழ்கும் எனப்பிரளய எச்சரிக்கைகள் நீள்கின்றன. இவை மிகையான கற்பனைகள் அல்ல என்பதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்துவிட்டன. நமது ஒரே வீடான இப்புவியை நாம் ஒவ்வொருவரும் காக்க உறுதி ஏற்கும் நேரம் வந்துவிட்டது.

'வாழ்வதற்கான உரிமையை' அரசியல் சட்டம் வழங்கியிருந்தாலும், இயற்கை வளமாக இருந்தால்தான் அது சாத்தியமாகும். மலர்களைச் சிதைக்காது தேனெடுக்கும் வண்டுபோல் இயற்கையைச் சிதைக்காது அதன் வளத்தைப்பெற வேண்டும். இயற்கை ஒவ்வொரு மனிதனின் தேவைகளையும் நிறைவேற்றுகிறது. ஆனால் பேராசைகளை அல்ல என்ற மகாத்மாவின் கருத்தை நினைவில் நிறுத்தி இயற்கை அன்னையைப் புரிந்து கொண்டு அவள் மடியில் ஆனந்தம் கொள்வோம்.

(கட்டுரையாளர், கோவை CMB கல்லூரி இணைப்பேராசிரியர் திரு.பி.கே.மனோகரன் ஆவார்).

❖❖❖❖❖

# படுகளம்

பேராசிரியர் டாக்டர். ப.க.பொன்னுசாமி
முன்னாள் துணை வேந்தர்

*சென்ற இதழின் தொடர்ச்சி....*

## எப்படி இது நடந்தது ?

அவுனுக்கு நாம் யோசிக்காம அவசரத்துல யோசனயச் சொல்வீட்டம்! நடக்குறது நடக்குட்டும்னு வெடீவெரைக்கும் இருந்திருக்கோணும்!' இப்போது நினைத்தார். 'இன்னக்கில்லீன்னாலும் பெறகொரு நாளக்கி உண்ம தெரிஞ்சிட்டா? வந்துவிடக்கூடிய விபரீதங்களை எண்ணிப் பார்க்கவும் நடுநடுங்கிப் போனார். வெளிச்சத்தைக் காணப் போகிற அடுத்த அரை மணி நேரமும் நெருப்பில் தவறி விழுந்து விட்டது போன்று மனம் கருகி அவர் வாசலில் திரும்பித் திரும்பி நடந்து கொண்டிருந்தார்.

இரண்டு சவாரி வண்டிகள் பள்ளிபுரம் இட்டேரியைத் தாண்டி வேகமாகப் போய்க்கொண்டிருந்தன. ஒன்றைக் குப்பண்ண கவுண்டர் ஓட்டினார். அதில் செல்லச்சாமிக் கவுண்டர் படுக்க வைக்கப்பட்டிருந்தார். பன்னீர்க் கவுண்டர் பின்னால் உட்கார்ந்திருந்தார். அடுத்த வண்டியை ஒருவர் ஓட்ட பெரியண்ண கவுண்டரையும் அதில் படுக்க வைத்திருந்தார்கள். பின்னால் தன்னாசிக் கவுண்டர் உட்கார்ந்திருந்தார்.

'ஒடம்புக்குச் செரியில்லாமச் செல்லசாமிக் கவுண்டர ஆஸ்பத்திரிக்கு அவசரமா எடுத்துகிட்டுப் போறாக' என்ற செய்தி எட்டியதும் கூத்தம்பூண்டி ஆத்தாள் வீடு ஆடிப்போனது! செங்கண்ணன் அவசரமாக வாசலிலிருந்து சவாரி வண்டியை வீதிக்கு இழுத்துப் பூட்டினான். பரபரப்பிலும் அழுகையிலும் இருந்து பெண்களையும் குழந்தைகளையும் சமாதானப்படுத்திவிட்டு நல்லசாமிக் கவுண்டரும், கண்ணுச்சாமிக் கவுண்டரும், சுந்தரசாமியும் வண்டியில் உடுமலைப்பேட்டைக்கு விரைந்தார்கள். சற்று முன் புறப்பட்ட வண்டிகளைப் பிடித்துவிட வேண்டுமென்று காளைகளை விரட்டினான் செங்கண்ணன்.

முன்னால் போன இரண்டு வண்டிகளும் நேதாஜி டாக்டர் ஆஸ்பத்திரியை அடைந்தன. விடியற்காலை நேரமானதால் ஆஸ்வத்தியில் இரண்டு நர்சுகளும் காவலாளியும் மட்டும் இருந்தார்கள்.

"அவரசம், அவரசம்! இவுகளப் பாருங்க! நாம் போயி டாக்டரக் கூட்டியார்ந்தர்ற" பன்னீர்க்கவுண்டர் நர்சுகளிடம் சொன்னார். டாக்டருக்கு அவர் தெரிந்தவர் என்பது நர்சுகளுக்குத் தெரிந்திருந்ததால் வண்டியிலிருந்த மூன்று பேரையும் உள்ளே கொண்டு வந்து படுக்க வைக்க உதவினார்கள்.

"என்ன இவுகுளுக்கு?" மூத்த நர்சு கேட்டாள். கையை உயர்த்திக் கட்டை விரலை வாய்க்குப் பக்கம் நீட்டி, 'தண்ணீக் கேசுக!". வார்த்தையில் சொல்லாமல் புரிய வைத்தார் தன்னாசிக் கவுண்டர். நர்சு உதட்டைப் பிதுக்கிக்கொண்டு "நீங்களெல்லாம் வெளியே போய் இருங்க" என்று சொல்லிவிட்டு ஒவ்வொருவர் மூக்கிலும் விரல் வைத்துப்பார்த்தாள். மற்ற நர்ஸ் ஊசி போடவும் திரவம் ஏற்றவும் வேண்டிய பொருள்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள்.

தூக்கக் கலக்கத்துடன் டாக்டர் வந்தார்.

"என்னம்மா, என்ன கண்டிசன்?" கேட்டுக்கொண்டே அவரும், சோதித்துப் பார்த்தார். மூத்த நர்ஸ் உதட்டைப் பிதுக்கினாள்.

வெளியில் செங்கண்ணன் வண்டியை நிறுத்த, கண்ணுச்சாமிக் கவுண்டரும், நல்லசாமிக் கவுண்டரும் சுந்தரசாமியும் வேகமாக இறங்கி ஆஸ்பத்திரிக்குள் வந்தார்கள். அவர்கள் தலைகள் தெரிந்ததும் மெல்ல வெளியே வீதிப்பக்கம் போனார் தன்னாசிக்கவுண்டர். குப்பண்ண கவுண்டரும் பன்னீர்க்கவுண்டரும் சோகமாக நின்று கொண்டிருந்தார்கள்.

"என்ன குப்பண்ணா, செல்லச்சாமி எப்பிடியிருக்குது" நல்லசாமிக் கவுண்டர் அவரசமாகவும் பயந்துபோயும் கேட்டார். "உள்ள வெச்சுப் பாக்கறாக", அவனால் அழுது கொண்டேஇந்தப்பதிலைத்தான் சொல்ல முடிந்தது.

எல்லாரும் அறையை நோக்கிப் போகவும் டாக்டர் அறைக்குள்ளிருந்து வெளியே வரவும் சரியாயிருந்தது. டாக்டர் நல்லசாமிக் கவுண்டரையும் கண்ணுச்சாமிக் கவுண்டரையும் நிமிர்ந்து பார்த்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் குனிந்து கொண்டு மெதுவாக நகர , டாக்டர்!" என்று வீறிட்டுக் கதறியபடி அவர்கள் அறைக்குள் நுழைந்தார்கள்.

பிணமாய்க் கிடந்த செல்லச்சாமிக் கவுண்டரின் உடல்மீது விழுந்து கதறி அழுதார்கள். டாக்டரும் திரும்பி வந்துநின்று கொண்டு கண்களில் வடிந்த துளிகளைத் துடைத்து கொண்டார்.


தேம்பித்தேம்பி அழுதுகொண்டே "என்னப்பா ஆச்சு?" குப்பண்ண கவுண்டரைப் பார்த்துக்கேட்டார் கண்ணுச்சாமிக்கவுண்டர்.

"சொல்லுங்கய்யா! என்ன நடந்தது களத்தில்?" ஆக்ரோசமாகக் கேட்டான் சுந்தரசாமி.

தொடரும்...

❖❖❖❖❖

# நூல் நயம்



நூல் : 1. கொங்கு குல மகளிர்
2. கொங்கு வேளாளர் சீர்களும், இலக்கியங்களும்

ஆசிரியர் : புலவர் செ.இராசு

வெளியீடு : கொங்கு ஆய்வு மையம், ஈரோடு

கொங்கின வரலாற்றை அகிலமெல்லாம் பரவ செய்வதில் பெரும் பங்கு கொண்டவரும், கல்வெட்டுத் துறையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்து சிகரம் கண்டவரும், ஆழ்ந்த அறிவும் புலமையும் கொண்டு கொங்கு மண்டலத்தின் பண்பாட்டுப் பயணத்தை வழி நடத்திச்செல்பவரும், கொங்குமாமணி, கல்வெட்டறிஞர், கலைச்செல்வர், வரலாற்றறிஞர், கொங்கு வரலாற்றுச் செம்மல் தமிழ்க்காவலர் முதலான பட்டங்களைப் பெற்றவருமான தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டு, தொல்லியல்துறை முன்னாள் தலைவர் முனைவர் புலவர் செ.இராசு அவர்களின் படைப்பில் வெளிவந்துள்ள மிக அருமையான இரண்டு நூல்கள் கொங்கு குல மகளிர் மற்றும் கொங்கு வேளாளர் சீர்களும், இலக்கியங்களும்

கொங்கு குல மகளிர் நூல் கொங்கு நாட்டுப்பெண்களின் பெருமையைப் பறைசாற்றுகிறது. பல்வேறு துறைகளில் ஆண்களுக்கு நிகராகவும், சில துறைகளில் ஆண்களுக்கு மேலாகவும் கொங்கு நாட்டுப்பெண்கள் சிறந்து விளங்கி வந்தனர் என்பதையும், கற்றறிந்த சான்றோர்களாக, கவிபாடும் புலவர்களாக, புலவர்களை ஆதரித்த புரவலர்களாக, புலவர்களால் போற்றிப் புகழ்ந்து பாடப்பட்டவர்களாக, வடமொழியிலும் வல்லவர்களாக, நல்லறம் கூறும் நடுவர்களாக, நாட்டு நிர்வாகம் செய்யும் உயர் அலுவலர்களாக, பக்தியில் சிறந்தவர்களாக, ஆலயத் திருப்பணி செய்து பல்வேறு கொடைகளைக் கோயிலுக்குக் கொடுத்தவர்களாக, ஆடவர்களை நெறிப்படுத்தும் குடும்பத் தலைவியர்களாக, அளப்பறிய ஆற்றல் படைத்தவர்களாக, மருத்துவக்கலையில் வல்லவர்களாக, தன்மான உணர்ச்சி உடையவர்களாகப் பலர் இருந்துள்ளனர் என்பதையும் தக்க ஆவணங்கள் மற்றும் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்த புலவர் இராசு அவர்கள் அவைகளைத் தொகுத்து ‘கொங்கு குல மகளிர்’ என்ற பெயரில் கொங்கு வானில் மின்னும் 27 நட்சத்திரங்களை இந்நூலில் அறிமுகப்படுத்தியுள்ளார். தாமரை நாச்சி, அருக்காணித் தங்கம், கொங்கு பிராட்டியார் முதலானோர் இந்நூலில் இடம்பெற்றுள்ளனர்.

புலவர் இராசு அவர்கள் தனக்கே உரிய நடையில் தேன்சுவை தமிழில் கொங்கு நாட்டுப்பெண்களின் வரலாற்றைப் கொங்கு சமுதாயத்திற்குப் பெருங்கொடையாக அளித்துள்ளார். புலவர் அவர்களின் அரிய உழைப்பில் வெளிவந்துள்ள இந்த சீரிய வரலாற்றுத் தொகுப்பு கொங்கின மக்கள் அனைவரும் படித்து மகிழவேண்டிய, பெருமைப்படவேண்டிய பொக்கிஷமாகும்.

‘கொங்கு வேளாளர் சீர்களும், இலக்கியங்களும்’ என்ற நூலில் கொங்கு வேளாளர் திருமணங்களில் இடம் பெற்ற சீர்களும், சீர்களுக்குரிய காரணகாரியங்களும் காலத்தால் அழிந்துவிடாமல் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலக்கிய மேடைபோல் கொங்கு வேளாளர் திருமண வீடுகள் திகழ்ந்தன என்பதையும் மங்கல வாழ்த்திற்குப் பின் புலவர்கள் கம்பர் வாழி, ஏரெழுபது,

திருக்கைவழக்கம் ஆகிய இலக்கியங்களைப் படித்தனர் என்பதையும் அவை வேளாளர் புகழ் பாடுகின்றன என்பதையும் புலவர் இராசு அவர்கள் பதிவு செய்துள்ளார்.

கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகளையும், அதன் பண்பாட்டுச்சிறப்பியல்களையும், அழகுபட மிகச்சிறப்பாக, ஒரு கொங்கு வரலாற்று ஆவணமாக படைத்துள்ள புலவர் இராசு அவர்களைக் கொங்கு சமுதாயம் என்றும் போற்றி நிற்கும். ஒவ்வொரு கொங்கு வேளாளரின் இல்ல நூலகத்திலும் இருக்க வேண்டிய இந்த இரு நூல்களும் கிடைக்குமிடம் :

கொங்கு ஆய்வு மையம்

**58/2,** திரு.வி.க. நகர் சாலை, பாலக்காட்டுத் தோட்டம்

ஈரோடு - 638 011. போன் : 0424-2262664

நயவுரை : டாக்டர் மணிமேகலை புஷ்பராஜ்

செயற்குழு உறுப்பினர்

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | R.தணிகாச்சலம் |
| பிறந்த தேதி | : | 18-08-1980 நேரம் : 10.40 p.m. |
| நட்சத்திரம் | : | விசாகம் 3ம் பாதம் |
| இராசி | : | துலாம் |
| இலக்கினம் | : | மேஷம் |
| தகப்பனார் பெயர் | : | N.P.ராமன் |
| தாயார் பெயர் | : | R.செல்லம்மாள் |
| சொந்த ஊர் | : | திருச்செங்கோடு , நாமக்கல் |
| கல்வி | : | B.E., (Civil) |
| வேலை | : | Project ER PLL Terna Bahrain |
| சம்பளம் | : | Rs. 1,00,000/- per month |
| குலம் | : | செம்பூத்தன் கூட்டம் |
| தேவை | : | Engineering / Any Degree / Doctor<br>வேலையில் இருப்பவர்கள்,<br>வேலை பார்க்க விருப்பம் உள்ளவர்கள் |
| தொடர்பு | : | 04286-229541, 9626855984 |

| | | | |
|---|---|---|---|
| மாந் | லக் | | சுக் |
| | இராசி | | புத<br>ராகு |
| கேது | | | சூரி<br>குரு |
| | நெப் | சந்<br>யுரே | செ<br>சனி<br>புளு |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி | | சந்<br>யுரே |
| புத<br>ராகு<br>நெப் | நவாம்சம் | | |
| சனி | | | கேது<br>லக்<br>புளு |
| | | குரு<br>மாந் | செவ் |